மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவை எப்படி வேண்டுமானாலும் முறைகேடாக நடக்கட்டும் என்று அவர்களை அனுமதிக்க முடியுமா? (குறுக்கீடு) நீங்கள் சொல்வது அப்படித்தான் இருக்கிறது. அவர்கள் முறையாக நடந்து கொண்டார்கள் என்றாவது உங்களால் சொல்ல முடியுமா?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பக்கத்திலேதான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிமுறைப்படிதான் அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றாவது சொல்ல முடியுமா? இதிலே ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டு, மறுபரிசீலனை செய்யுங்கள் என்று என்னிடம் கேளுங்கள். எதுவுமேயில்லாமல் கேட்டுக் கொண்டிருப்பது வேண்டாம். இது பற்றி என்னுடைய முடிவை ஒன்றுக்கு இரண்டு, மூன்று முறை சொல்லியாகிவிட்டது. எனவே உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) குன்னூர் நிலச் சரிவில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. த. க. இராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் எம். கருப்புசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எம். கருப்புசாமி. அவருடைய தொகுதியைச் சேர்ந்தது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குன்னூர் நிலச் சரிவில் உயிர் இழந்தோரின் குடும்பங்களுக்கு அரசின் உதவித் தொகை வழங்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 28] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

அறிக்கை

1993-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெய்த பெருமழையினால் நீலகிரி மாவட்டத்தில், கூடலூர்-மைசூர் சாலையில் மரப்பாலம் அருகில் மிகப் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவினால் சிலர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயமடைந்தனர். இந் நிலச்சரிவில் உயிரிழந்த 10 நபர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தமிழக அரசின் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10,000/- வீதமும், பலத்த காயமடைந்த 8 நபர்களுக்கு தலா ரூ.5,000/- வீதமும் மற்றும் சிறு காயமடைந்த 4 நபர்களுக்கு தலா ரூ. 2,500/- வீதமும் மொத்தம் ரூ.1.50 இலட்சம் வழங்க 22-11-1993 அன்றே ஆணையிடப்பட்டது. இது தவிர, நிலச் சரிவினால் மரணமடைந்த 10 நபர்களின் குடும்பத்தினருக்கு, தலா ரூ.50,000/- வீதம் பாரதப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.5/-இலட்சம் வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவினால் காணாமல் போன ஏனைய 15 நபர்களின் குடும்பங்களுக்கும் தலா ரூ.10,000/-வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் தற்போது உள்ளது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-11-1993 அன்று மரப்பாலம் அருகே பேய் மழை பொழிய, நீர் ஊறி, நிலம் பிளந்து, அந்த மாமலையின் சிகரம் எல்லாம் சிதறுண்டபோது, மண்ணோடும், மலைப் பாறைகளோடும் மறைந்து போனவர்கள், இறந்து போனவர்கள் முகத்தைக் கூட காண முடியவில்லை என்று அவர்களுடைய உறவினர்கள் பதைபதைத்த காட்சி; துண்டான கைகளும், கால்களும் ஆற்றங்கரை ஓரம் அந்த மக்கள் கதறி அழுது தேடியபோது, அவர்கள் கண்ணீரைத் துடைக்க தாயுள்ளம் கொண்ட எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடத்தைப் பார்வையிட்டு, உயிரிழந்த 10 குடும்பங்களுக்கு, தலா 10,000 ரூபாயும், காயமடைந்த 12 பேர்களுக்கு உதவியும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள். ஆனால் அந்த மண்ணில் புதையுண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து அந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்கள் பலர் அந்த மண்ணில் புதையுண்டு இறந்துவிட்டார்கள். அவர்கள் விபத்தில் இறந்திருப்பார்கள் என்று அவர்கள் குடும்பத்தார் அறிந்து கொள்வதற்கே ஒரு மாதத்திற்குமேல் ஆகிவிட்டது. ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகளிடத்தில் இந்த விபத்தில்தான் அவர்கள் இறந்திருக்க

வேண்டுமென்று எடுத்துக் கூறியும்கூட, அதற்கான சான்றிதழ்களைத் தர மறுக்கிறார்கள். மேலும் அந்த மரப்பாலம் பகுதியில் அழிந்துபோன குடும்பங்களில் 12 பேருக்கு மட்டும் வீட்டு மனைப் பட்டா வழங்கி இருக்கிறார்கள். மீதியுள்ள 6 பேர்களுக்கு- -

Rejina Mary, wife of George
Sellath Mary, wife of Lourdhu
Anthoniammal, wife of Raju
Rajammal, wife of Innasimuthu

இவர்களுடைய கணவர்கள் அத்தனைபேரும் அந்த விபத்தில் புதையுண்டு விட்டார்கள். மற்றும் பவுன்ராஜ், தெரசா-மொத்தம் 6 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படவில்லை. இவர்களுக்கு குன்னூர்-பாரக்ஸ் சாலையில் உள்ள புறம்போக்கு நிலத்தில் சர்வே எண் பி/13/6 என்ற இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ நிலம் வழங்கி, பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் வீட்டு மனைப் பட்டா வழங்க ஆவன செய்வாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக இந்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்தது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அதை மீண்டும் நான் சொல்ல விரும்பவில்லை. காணாமல் போனவர்களில் பலர் யார், யார் என்பதைக் கண்டு பிடிப்பதில் சில சங்கடங்கள் இருந்தன. இப்போது என்னிடத்திலே இருக்கிற கணக்குப்படி 15 பேர்கள் காணாமல் போயிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். விரைவிலே கொடுக்கப்படும். அங்கே சிலருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையிலே அவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டதோ அதே அடிப்படையில் விட்டுப் போனவர்களுக்கும் ஆராய்ந்து இந்த அரசு விரைவிலே பட்டா கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த.க. இராதாகிருஷ்ணன்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமங்கலம் தொகுதியில் உள்ள கொத்தை ஆலங்குளம் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத்

1994 ஏப்ரல் 28] [திரு. த.க. இராதாகிருஷ்ணன்]

தலைவர் திரு. சங்கரன், அவர் மனைவி மற்றும் குழந்தைகளுடன் தனது மாமனார் ஊரான கூடலூருக்குப் பேருந்தில் செல்கின்ற போது அந்த குன்னூர் நிலச்சரிவில் அந்தப் பேருந்தும் சிக்கி, ஆயிரக்கணக்கான டன் மணலால் மூடப்பட்டு உயிரிழந்துள்ளனர். இதுவரை எந்தவொரு நிவாரணத் தொகையும் அவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்களைத் தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிற அந்த குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா? அதைப்போல அந்தப் பேருந்தில் சென்று நிலச் சரிவில் சிக்கி உயிரிழந்த பலருக்கும் நிவாரணத் தொகை வழங்குவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதில் எவ்வளவு பேர் உயிரிழந்தார்கள் என்பதும், அவர்களுக்கு எல்லாம் உடனடியாகப் பணம் கொடுக்கப்பட்டது என்பதும் தெரியும். உயிரிழந்தவர்களைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முதலில் தெரிவித்ததாலே நான் மீண்டும் அதைப் படிக்கவில்லை. 10 பேர்கள் உயிரிழந்தார்கள் என்பதும், அதில் 8 பேருக்கு 10,000 ரூபாய் நிவாரணத் தொகையை முதலமைச்சர் அவர்கள் மறுநாளைக்கு மறுநாளே கொடுக்க உத்தரவிட்டார் என்பதும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே காயம் அடைந்தவர்களுக்கு ரூ. 5000-மும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு ரூ. 2,500-மும் கொடுக்கப்பட்டது என்பதும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. காணாமல் போனவர்கள் என்று பார்த்ததில் 15 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பதற்கும் முதலமைச்சர் உத்தரவிட்டார்கள் என்று இப்போதுதான் சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் போனார்கள் என்று சொல்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போனவர்கள் அத்தனை பேருக்கும் உடனே அதைச் செய்வதற்காக மத்தியப் பேரரசிலிருந்து அதற்கு வேண்டிய ராணுவத்தைக் கொண்டு வந்து முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். எவ்வளவு பேர் காணாமல் போனார்கள் என்பதை ஆய்வு செய்தார்கள். ஆகவேதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி ஆயிரக்கணக்கானவர்கள் அல்ல. இறந்தவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுத்துவிட்டோம். காணாமல் போனவர்கள் பற்றியும் கணக்கு எடுக்கப்பட்டு கொடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல்லாயிரக்கணக்கான என்பது சரியல்ல. பலர் இறந்துவிட்டார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். (குறுக்கீடு) அவர் சொன்னது பல்லாயிரக்கணக்கான (குறுக்கீடு)

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியது, பல்லாயிரக்கணக்கான டன் எடையுள்ள மணலால் மூடப்பட்டு அந்தப் பேருந்தில் சென்றவர்கள் உயிர் இழந்துள்ளனர் என்பதுதான். அந்தப் பேருந்து விபத்தில் உயிர் இழந்தவர்களில் எனது தொகுதியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். ஆகையால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இருக்கலாம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் குரும்பல் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குரும்பல் உயர்நிலைப் பள்ளி முழுவதும் கீற்றுக் கொட்டகையாக இருப்பதால், புதிய கட்டிடம் உடனே கட்ட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குரும்பலில் ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப் பள்ளி இல்லை. இங்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிதான் உள்ளது. இப்பள்ளிக்கு